தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,  தேதி: 1-12-2014

ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**திறன் மேம்பாட்டு பயிற்சி செம்மையான பணிக்கு அவசியம் -
முனைவர். வெ. இறையண்பு இ.ஆ.ப. பேச்சு**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக திறன்மேம்பாட்டு பயிற்சித் திட்டம் பேராசிரியர்கள் மற்றும் அலுவலர்களுக்கு, அவர்கள் கோப்புகள் மேலாண்மை, கோப்புகள் பாதுகாத்தல், நிர்வாகத் தேர்வு மற்றும் கோரிக்கை அனுப்புதல் போன்ற பலவிதமான நுணுக்கங்களை செவ்வனே கற்றுக் கொள்ள இப்பயிற்சி பேருதவியாக இருக்கும்.

முன்னதாக பல்கலைக்கழக பதிவாளர் முனைவர் ரா. இரபீந்திரன் அவர்கள் வரவேற்புரை ஆற்றிப் பேசுகையில், அலுவலக இடர்பாடுகளிடையே ஒவ்வொருவரும் திறம்பட பணிகள் ஆற்றிட இத்திறன் மேம்பாட்டு யிற்சி ஏதுவாக இருக்கும் என்று கூறினார்.

திரு. எம்.ஆர். ஜெகந்நாதன், ஒருங்கிணைப்பாளர் மற்றும் பதிவு அதிகாரி, அண்ணா மேலாண்மை நிறுவனம் அவர்கள் பேசுகையில், இத்திறன் மேம்பாட்டு பயிற்சியின் முறையான வகுப்புகள், திட்டமிட்ட பாடம், வல்லுநர்களின் கருத்து மற்றும் பயிற்சி, திட்டத்தின் முக்கியத்துவம் மற்றும் பயிற்சியின் தொகுப்பு நடத்தப்படும் முறைகள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

முனைவர் கு. இராமசாமி பல்கலைக்கழக துணைவேந்தர் அவர்கள் பேசுகையில், பேராசிரியர்கள் மற்றும் அலுவலர்கள், கோப்புகள், பதிவு செய்யப்படும் ஏடுகள், ஆகியனவற்றை திறம்படக் கையாண்டு கணக்குப் பரிசோதனை மற்றும் தணிக்கையாளர் மறுப்பு இல்லாமல் கணக்குகள் மற்றும் அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

முனைவர். வெ. இறையண்பு இ.ஆ.ப. இயக்குநர், அண்ணா மேம்பாட்டு நிறுவனம் மற்றும் இயக்கநர் (பொதுப்பயிற்சி) அவர்கள் பேசும் போது, சவால்களை துணிவாக எதிர் கொள்ள அர்ப்பணிப்போடும், கடமை உணர்வோடும், அலுவலர்கள் பொறுப்புணர்ந்து செயல்படவேண்டும் என்று விளம்பினார். மேலும் வல்லுநர்கள், குழுவாக செயல்பட்டு தவறுகளை திருத்திக் கொள்வதோடு குளறுபடி இல்லாமலும் பார்த்துக் கொள்ளுதல் அவசியம் என்று வலியுறுத்தினார்.

எல்லாம் தெரியும் என்ற மனப்பாங்கும், அறியாமையையும், ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவமும் நல்ல கற்றல் திறனுக்கு அத்தியாவசியம் என்றும் தெரிவித்தார். அவர் பல அனுபவ அறிவை மேற்கோள் காட்டி கூறியபோது, பிரச்சினைகளை அலசி ஆய்வு செய்து, தீர்வு காணுவதலில் அவசியம், கலந்துசையாடல், செய்திப் பகிர்வு, அறிவு சார்ந்த உண்மைகளை பரஸ்பரம் அறிந்து கொள்ளுதல், திறமையான தேர்ச்சி, உடனுக்குடன் வேலையைத் தேர்வு செய்து முடித்தல், கடிவாளம் போட்ட குதிரைபொல் அல்லாமல், பல வகையான செய்திகளை அறியும் முயற்சி, ஆற்றலின் முக்கியத்துவம், வார மற்றும் மாதாந்திர ஆய்வு, கோரிக்கைகளுக்கான தக்க காரணம், விளக்கம் ஆகியவற்றின் அவசியத்தை அறிந்து கொள்ள, முழு முயற்சியில் ஈடுபட வேண்டும் என்று தெரிவித்தார்.

பாடத்திட்டத்தை வெளியிட்ட இறையண்பு அவர்களைத் துணைவேந்தர் அவர்கள் கௌரவித்தார். நினைவுப்பரிசும் வழங்கப்பட்டது.

இறுதியாக, முதல்வர் (இளநிலை) மகிமைராஜா, அவர்கள் நன்றியுரை தெரிவித்தார்.

மக்கள் தொடர்பு அலுவலர்


TAMIL NADU AGRICULTURAL UNIVERSITY
By
CAPACITY BUILDING PROGRAMME
ANNA INSTITUTE OF MANAGEMENT
Course Material
Dr. R. Rabindran,
Registrar, TNAU
Dr. V. IRAI ANBU, I.A.S.,
Director, Anna Inst.of Management
Dr.K. Ramasamy,
Vice Chancellor, TNAU
Dr. S. Mahimairaja,
Dean (Agri), TNAU
Th. M.R. Jagganathan,
Co-ordinator


TAMIL NADU AGRICULTURAL UNIVERSITY
CAPACITY BUILDING PROGRAMME
By
ANNA INSTITUTE OF MANAGEMENT
2.12.2014 to
Inauguration by
Dr. V. IRAI ANBU, I.A.S.
Director, Anna Institute of Management
In the presence of
RAMASAMY, Ph.D.
Vice Chancellor
TNAU


TAMIL NADU AGRICULTURAL UNIVERSITY
CAPACITY BUILDING PROGRAMME
By
INSTITUTE OF MANAGEMENT
2.12.2014 to 4.12.2014
I.A.S.
Director
Management
In the presence of
Dr. K. RAMASAMY, Ph.D.
Vice Chancellor
TNAU


TAMIL NADU AGRICULTURAL UNIVERSITY
ACITY BUILDING PROGRAMME
By
NA INSTITUTE OF MANAGEMENT
2.12.2014 to 4.12.2014
In the presence of
Dr. K. RAMASAMY, Ph.D.
Vice Chancellor
TNAU